IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 656/2019 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கஷ்மீர் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. லூயிஸ் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.07.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கடல் தொழில் செய்து வருகிறேன். 13.07.2012ம் தேதி நான் கடல் தொழிலுக்கு எனது சொந்த வள்ளத்தில் (படகு) கடலுக்கு சென்று விட்டு அன்று இரவு 12.00 மணியளவில் கரை திரும்பினோம். எனது வள்ளத்தை கரையில் நிறுத்தி விட்டு நான் வீட்டிற்கு வந்து விட்டேன். அதன்பிறகு கடல் சீற்றத்தால் மறுநாள் நான் கடலுக்கு செல்லவில்லை. அதன்பிறகு நான் 14.07.2013ம் தேதி சென்று பார்க்கும் போது எனது வள்ளத்தை காணவில்லை. எனவே காற்றாறல் எனது வள்ளம் கடலுக்குள் இழுத்துக் கொண்டு போயிருக்கும் என்று எண்ணி நான் பல கடற்கரை இடங்களில் தேடி பார்த்தேன், ஆனால் கிடைக்கவில்லை. அதன்பிறகு 19.07.2012ம் தேதி குளச்சல் கடலோர காவல்படையில் புகார்மனுக் கொடுத்தேன். மேற்படி **புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அதன்பிறகு ஒரு நாள் கேரளாவில் விழிஞ்சம் என்ற இடத்தில் எனது வள்ளத்தை வைத்து ஒரு நபர் கடல் தொழில் செய்து வந்தது எனக்கு தெரிய வந்தது. எனவே நான் குளச்சல் கடலோர காவல்படையினரை அழைத்துக் கொண்டு கேரளா விழிஞ்சம் இடத்திற்கு சென்றோம். அங்கு எனது வள்ளம் கடலில் இருந்தது. எனவே நான் குளச்சல் கடலோர காவல்படை காவலர்கள் மற்றும் கேரளா கடலோர காவல்படை காவலர்கள் மூலம் எனது வள்ளத்தை கடலில் இருந்து மீட்டெடுத்து கரையில் ஒதுக்கி

வைத்துவிட்டு வீட்டிற்கு வந்து விட்டோம். அதன்பிறகு எனது வள்ளத்தையும் அதில் இருந்த வலைகளையும் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் **புகைப்படங்கள் (4 எண்ணிக்கைகள்) அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. என்னை குளச்சல் கடலோர காவல்படை காவலர்கள் விசாரணை செய்தார்களா அல்லது குளச்சல் காவல்நிலைய காவலர்கள் விசாரணை செய்தார்களா என்றால், குளச்சல் கடலோர காவல்படை காவலர்கள் தான் விசாரணை செய்தார்கள். காணாமல் போனது பைபர் போட் என்றால் சரிதான். மேற்படி போட் எனக்குரியது என்பதை நிருபணம் செய்ய எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றால், சரிதான். என்னை குளச்சல் காவல்நிலைய காவலர்கள் விசாரணை செய்யவில்லை என்றால், சரிதான்.

2. பைபர் போட் இயங்க இன்ஜின் இருக்க வேண்டும் என்றால், சரிதான். எனது பைபர் போட்டை நான் குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் கட்டும் போது இன்ஜினை கழட்டி விட்டு தான் கட்டினேன் என்றால், சரிதான். இவ்வழக்கில் பட்டியல் சாட்சி 2 டேவிட், 3 மரியஜான் மற்றும் 4 ஜேசு புத்திரன் ஆகியோர்கள் என்னுடன் கடல் தொழிலுக்கு வரும் நபர்கள் என்றால், சரிதான்.

3. எனது காணாமல் போன வள்ளத்தை கேரளா மாநிலம் விழிஞ்சத்தில் தான் உள்ளது என்று கூறிய நபரின் பெயர் மற்றும் விலாசம் தெரியாது என்றால், சரிதான். நான் தவறாக பொய்யான புகார் கொடுத்து அதனடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.